**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS (Recorded through V.C)**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 232/2013 P.W. 6 /L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. குமாரி சித்ரா (காவல் ஆய்வாளர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.02.2026.

**இவ்வழக்கின் புலன்விசாரணை காவல் அதிகாரி தற்சமயம் பணிமாறுதலில் சென்னை மாநகர பாதுகாப்புபிரிவில் காவல் ஆய்வாளராக பணிசெய்து வரும் நிலையில் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தும் பொருட்டு வழக்கின் தன்மை மேற்படி சாட்சியின் பணியின் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மேற்படி சாட்சிய விசாரணையானது இணைய தள காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Microsoft Teams செயலி மூலம் பதிவுச் செய்யப்படுகிறது. மேற்படி சாட்சியானவர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்ற வளாகத்தில் காணொலி காட்சி அறையிலிருந்து சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும், அரசு தரப்பு வழக்கறிஞரும் முன்னிலையாகியுள்ளார்கள்.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது சென்னை மாநகர பாதுகாப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013 ம் வருடம் குளச்சல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது ஏற்கனவே 10.05.2012 ம் தேதி பதிவுச் செய்து முதல் விசாரணை முடித்து வைத்திருந்த குளச்சல் காவல்நிலைய குற்றஎண் 196/2012, சட்டப்பிரிவுகள் 294(பி),323, 506 பத்தி ஒன்று இ.த.ச 1860 வழக்கை 05.05.2013 ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிட்சை அளித்த மருத்துவர் திரு. கோசல்ராம் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற காயச்சான்றின் படி மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஏற்கனவே முன்பிணை பெற்றிருந்தபடியால் மருத்துவர் கொடுத்த மருத்துவ சான்றின் அடிப்படையில் சட்டப்பிரிவினை காயத்தினைப்

பொறுத்து இ.த.ச. 1860 325 ஆக பிரிவு மாற்றம் செய்து 05.05.2013 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை** :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஏற்கப்பட்டுஎன் முன்னிலையில் இணைய தள காணொலி காட்சி வாயிலாக சென்னை சிட்டி சிவில் நீதிமன்ற காணொலி காட்சி அறையில் வைத்து **எஸ். பரணி** (Computer Operator) முன்னிலையில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.